# புதிய பாடசாலை விதிகள்: செல்போன்கள், மின்-சிகரெட் பாவனை(vaping) மற்றும் கஞ்சா

கனடாவின் வகுப்பறைகளில் கவனச்சிதறல்களைக் குறைக்கவும் பிள்ளைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் மிகவும் விரிவான திட்டத்தை ஒன்ராறியோ அறிமுகப்படுத்தியுள்ளது.

## பாடசாலைகளில் செல்போன் பயன்பாடு

பாடசாலைகளில், அறிவுறுத்தல் நேரத்தில் மாணவர்கள் மொபைல் சாதனங்களைப் பயன்படுத்துவது இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள்:

- வகுப்பறையில் கற்றலை மேம்படுத்த உதவும்
- பிள்ளைகளைக் கற்றலில் கவனம் செலுத்த உதவும்
- சிறந்த மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்தும்

ஆசிரியர் அனுமதித்தால் தவிர, 7 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நேரத்தில் செல்போன்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. மழலையர் பள்ளி முதல் 6 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்குப், பாடசாலை நாள் முழுவதற்கும் இது பொருந்தும்.

ஒரு மாணவர் தனது செல்போனைப் பார்வையில் படாத வண்ணம், அணைத்து அல்லது நிசப்தமாக வைக்காவிட்டால், வகுப்பில் கற்றல் நடக்கும் நேரம் முழுவதும் வகுப்பறையில் உள்ள ஒரு சேமிப்புப் பகுதியில் அதனை வைக்கும்படி கேட்கப்படுவார்கள். தங்கள் சாதனங்களைக் கொடுக்க மறுக்கும் மாணவர்கள் அதிபரின் அலுவலகத்துக்கு அனுப்பப்படுவார்கள் அதிபர்கள் ஒவ்வொரு சூழ்நிலையையும் மதிப்பாய்வு செய்து பொருத்தமான பதில் நடவடிக்கையைத் தீர்மானிப்பார்கள்.

© King's Printer for Ontario, 2024

பின்வரும் சில சூழ்நிலைகளில், கற்றல் நேரத்தில் மொபைல் சாதனத்தைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்படுகிறது:

- ஒரு ஆசிரியரின் அறிவுறுத்தலின் கீழ் கல்வி நோக்கங்களுக்காக இது பயன்படுத்தப்படும்போது
- உடல்நலம் அல்லது மருத்துவ காரணங்களுக்காக இது தேவைப்படும்போது
- சிறப்புக் கல்வித் தேவைகளை இது ஆதரிக்கும்போது

## மின்-சிகரெட் பாவனை மற்றும் புகைபிடித்தல்

மாணவர்கள் புகையிலைப் பொருட்கள், மின்-சிகரெட்டுகள் (vapes) அல்லது நிகோடின் பொருட்களைப் பாடசாலையில் வைத்திருக்கவோ பயன்படுத்தவோ முடியாது. உங்கள் பிள்ளை இந்தப் பொருட்களில் எதையாவது வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அவை உடனடியாகக் கையளிக்கப்பட வேண்டும் அத்துடன் அது உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

## கஞ்சா (Cannabis)

பாடசாலையிலோ அல்லது பாடசாலை நிகழ்விலோ, மாணவர்கள் களியாட்டக் கஞ்சாவை வைத்திருக்கவோ, களியாட்டக் கஞ்சாவின் செல்வாக்கின் கீழ் இருக்கவோ அல்லது களியாட்டத்திற்காக மற்றவர்களுக்குக் கஞ்சாவைக் கொடுக்கவோ முடியாது. உங்கள் பிள்ளை களியாட்டக் கஞ்சாவுடன் கண்டுபிடிக்கப்பட்டால் - அது உடனடியாகக் கையளிக்கப்பட வேண்டும் அத்துடன் அது உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

மாணவர்கள் **மருத்துவக் கஞ்சா பற்றிய அனைத்துச் சட்டங்களையும் பின்பற்றினால்,** பாடசாலையில் மருத்துவக் கஞ்சாவைத் தங்கள் சொந்த மருத்துவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம்.

## மாகாண நடத்தை விதிகள் பற்றி

எங்கள் மாகாண நடத்தை விதிகள் பாடசாலைச் சமூகங்களின் நடத்தைக்கான தெளிவான தரநிலைகளை அமைக்கிறது. அதன் நோக்கம், பாடசாலைகள் ஒரு நேர்மறையான கல்விச் சூழலை உருவாக்க உதவுவது மற்றும் மாணவர்களின் சாதனை மற்றும் நல்வாழ்வை ஆதரிப்பதாகும்.

பாடசாலையில் ஆரோக்கியமான கற்றல் சூழலை உருவாக்க உதவுவதில் உங்கள் ஆதரவையும் கூட்டாண்மையையும் நாங்கள் பாராட்டுகிறோம்.

புதிய விதிகள் மற்றும் எங்கள் மாகாண நடத்தை விதிகள் பற்றி மேலும் அறியத் தயவுசெய்து **ontario.ca/SchoolRules** ஐப் பார்வையிடவும்.